# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:** 347/மா/2025

**நாள்:26.02.2026**

| | | |
|---|---|---|
| த. விஜயன்<br>தூத்துக்குடி | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தூத்துக்குடி மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

தூத்துக்குடி, செல்சினி காலனி, 3வது தெரு கிழக்கு, கதவு எண் 5B/102 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. விஜயன் என்பவரின் 25.08.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.08.2025 அன்று பெறப்பட்டு, 347/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

தூத்துக்குடி, செல்சினி காலனி, 3வது தெரு கிழக்கு, கதவு எண் 5B/102 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. த. விஜயன் என்பவர் தனது 25.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1) மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வரும் வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரும் விண்ணப்பம் தூத்துக்குடி மாநகராட்சி உயர்திரு ஆணையாளர் அவர்களுக்கு கடந்த 19.05.2025–ம் தேதியில் பதிவு அஞ்சல் மூலமாக விண்ணப்பம் வழங்கினேன்.

(2) விண்ணப்பம் தொடர்பாக தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலக உயர்திரு உதவி ஆணையர் அவர்கள் கடிதம் ந.க. எண் அ1/1115/2025–ன் கீழ் வழங்கப்பட்ட தகவலில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808–ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு எண் 8/86–ல் தெரிவித்துள்ள பிளாட் எண் 8 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதால் அதன்படி மாநகராட்சிக்கு சொந்த இடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்று தகவல் வழங்கினார்.

(3) தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலக உயர்திரு உதவி ஆணையர் அவர்கள் கடிதம் ந.க. எண் அ1/1115/2025–ன் தொடர்பாக தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6(1)–ன் கீழ் 05/07/2025–ம் தேதியன்று இரண்டு மனுக்கள் அளித்தேன். இதுநாள் வரையில் தகவல் வழங்கவில்லை முதல் மனுவின் விவரம் கீழ்க்கண்டவாறு.

(4) கடந்த 28.12.2022–ம் தேதி தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2 க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் நிலத்தில் உள்ள எனது வீட்டிற்கு சொத்துவரி விதிக்குமாறு விண்ணப்பம் வழங்கினேன்.

(5) எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அதற்கு உரிய காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

(6) வரிவிதிப்பிற்கு உரிய ஆவணங்கள் அனைத்தும் விண்ணப்பத்துடன் இணைத்து உள்ளேன்.

(7) உயர்திரு மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு சொத்து வரி விதிக்குமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(8) மேலும் வரிவிதிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் காரணங்கள் என்ன என்ற விவரம் வழங்கவும்,

(9) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2–க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் நிலத்தில் உள்ள எனது வீட்டிற்கு சொத்து வரி விதிப்பிற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்ன விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் அரசு உத்தரவுகள் மற்றும் அறிவிக்கைகள் இருப்பின் அதன் தொடர்புடைய முழு விவரங்களை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(10) விண்ணப்ப மனுவில் நான் கூறிய அனைத்து விவரங்களையும் பதிவு அஞ்சல் மூலமாக அளித்தேன்.

(11) மேற்கண்ட மனுவிற்கு உயர்திரு உதவி ஆணையர் (பொ) தெற்கு மண்டலம் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கடிதம் எண் ந.க. எண் அ1/1115/2025 வழங்கப்பட்ட தகவலில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808ல் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு எண் 8/86–ல் தெரிவித்துள்ள பிளாட் எண் 8 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதால் அதன்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்று தகவல் வழங்கியுள்ளார்.

(12) தற்போது தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2–க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் உள்ள மனுதாரர் ஆகிய த. விஜயன் பதிவு துறை மூலமாக கிரையம் பெற்ற நிலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆவதற்கு முன்பு 1996–ஆம் ஆண்டு நில உரிமையாளர் தர்மராஜ் அவர்களின் நிலங்கள் மனைகளாக விற்பனை செய்யப்பட்ட பதிவு துறை ஆவணங்கள் விவரம் பின்வருமாறு :–

(13) 1. தர்மராஜ் மற்றும் மனோரஞ்சிதம்மாள் அவர்கள் சுந்தரம் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பதிவு ஆவண எண் 105/1996 நாள் 18.01.1996.

2. சுந்தரம் அவர்கள் கிருஷ்ணராஜா அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பதிவு ஆவண எண் 2186/2021 நாள் 16.06.2021.

3. கிருஷ்ணராஜா அவர்கள் சிவசங்கர் மற்றும் மகேஸ்வரி அவர்களுக்கு எழுதிக் கொடுத்த பதிவு ஆவண எண் 4064/2021 மற்றும் 4063/2021 நாள் 01.11.2021.

4. சிவசங்கர் மற்றும் மகேஸ்வரி அவர்கள் மனுதாரரான விஜயன் ஆகிய எனக்கு எழுதிக் கொடுத்த ஆவண எண் 5146/2022 நாள் 19.10.2022.

(14) மேலும் வருவாய்த் துறை அலுவலகத்தால் வழங்கப்படும் நில உரிமை ஆவணங்கள் மற்றும் பதிவு துறை ஆவணங்களின்படி மனுதாரரான விஜயன் ஆகிய எனக்கு பாத்தியப்பட்ட நிலம் (மனை) மாநகராட்சிக்கு சொந்தமாக இருக்கும்பட்சத்தில் மாநகராட்சிக்கு உரிய நில உரிமை ஆவணங்களான வருவாய்த் துறை ஆவணங்கள் மற்றும் அதன் தொடர்புடைய முழு விவரங்கள் அடங்கிய சான்றிட்ட நகல்கள் வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)–ன் கீழ் வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(15) மேலும் வருவாய்த் துறை அலுவலகத்தால் வழங்கப்படும் நில உரிமை ஆவணங்கள் மற்றும் பதிவு துறை ஆவணங்களின்படி மனுதாரரான விஜயன் ஆகிய எனக்கு பாத்தியப்பட்ட நிலம் (மனை) மாநகராட்சிக்கு சொந்தமாக இருக்கும்பட்சத்தில் மாநகராட்சிக்கு உரிய நில உரிமை ஆவணங்களான பதிவுத் துறை ஆவணங்கள் மற்றும் அதன் தொடர்புடைய முழு விவரங்கள் அடங்கிய சான்றிட்ட நகல்கள் வழங்க தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(16) மேலும் இரண்டாவது மனுவின் விவரங்கள் பின்வருமாறு :

(17) கடந்த 28.12.2022ம் தேதி தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2 க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் உள்ள நிலத்தில் எனது வீட்டிற்கு சொத்துவரி விதிக்குமாறு விண்ணபப்பம் வழங்கினேன்.

(18) எனது விண்ணபப்பம் நிராகரிக்கப்பட்டது அதற்கு உரிய காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை.

(19) வரிவிதிப்பிற்கு உரிய ஆவணங்கள் அனைத்தும் விண்ணபப்பத்துடன் இணைத்து உள்ளேன்.

(20) உயர்திரு மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் நான் குடியிருக்கும் வீட்டிற்கு சொத்துவரி விதிக்குமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(21) மேலும் வரிவிதிப்பு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் காரணங்கள் என்ன என்ற விவரம் வழங்கவும்,

(22) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2 க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் உள்ள எனது வீட்டிற்கு சொத்துவரி விதிப்பிற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் என்ன விண்ணபப்பத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள் அரசு உத்தரவுகள் மற்றும் அறிவிக்கைகள் இருப்பின் அதன் தொடர்புடைய முழு விவரங்களை வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(23) பார்வையில் காணும் விண்ணப்ப மனுவில் நான் கூறிய அனைத்து விவரங்களையும் பதிவு அஞ்சல் மூலமாக அளித்தேன்.

(24) மேற்கண்ட மனுவிற்கு உயர்திரு உதவி ஆணையர் (பொ) அவர்கள் தெற்கு மண்டலம் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கடிதம் எண் ந.க. எண் அ1/1115/2025 வழங்கப்பட்ட தகவலில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808–ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு எண் 8/86–ல் தெரிவித்துள்ள பிளாட் எண் 8 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சி சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதால் அதன்படி மாநகராட்சி சொந்தமான இடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்று தகவல் வழங்கியுள்ளார்.

(25) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808–ல் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண் 8/86க்கு மனைப் பிரிவு உரிமையாளரின் பெயர் மற்றும் அதன் தொடர்புடைய முழு விவரம் அடங்கிய சான்றிட்ட நகல்கள் தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(26) தூத்துக்குடி மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் மீளவிட்டான் பகுதி 2 க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262ல் த. விஜயன் பெயரில் கிரையம் பெற்ற உள்ள நிலம் மாநகராட்சி சொந்தமாக இருக்கும் பட்சத்தில் மனைப் பிரிவு உரிமையாளரால் நன்கொடையாக வழங்கப்பட்ட பதிவு பெற்ற பரிசுப் பத்திரத்தின் (தானப் பத்திரம்) நகல்கள் மற்றும் அதன் தொடர்புடைய முழு விவரம் அடங்கிய சான்றிட்ட நகல்கள் தகவல் பெறும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6(1)ன் கீழ் வழங்க கேட்டுக் கொள்கிறேன்.

(27) மேலும் தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலக உயர்திரு உதவி ஆணையர் அவர்கள் கடிதம் ந.க. எண் அ1/1115/2025–ன் தொடர்பாக கடந்த 05.08.2025 தேதியன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 19(1)ன் மேல்முறையீட்டு மனு அளித்தேன். இதுநாள் வரைவில் தகவல் வழங்கவில்லை அனைத்து மனுக்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

(28) உயர்திரு முறைமன்ற செயலாளர் அவர்கள் என் மனு மீது விசாரணை செய்து தீர்வு வழங்குமாறு மிக பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 17.10.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. இருப்பினும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.11.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 25.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். மேலும் அவரது எழுத்துபூர்வமான வாக்குமூலத்தையும் சமர்ப்பித்துள்ளார்:–

<u>எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்ட வாக்குமூலம்:–</u>

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு அல்ல என்ற விவரங்களை மூன்று ஆவணக் குறிப்புகள் மூலமாக தெரியபடுத்துகிறேன். முதல் ஆவணக்குறிப்பு UDR–ல் உள்ள விவரங்கள்படி,

(1) மனைப்பிரிவு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள புல எண்கள் 808 (ம) 809 ஆகிய நிலத்தின் நில உடமை பதிவுத் திட்ட பதிவேடுகளின்படி (UDR) குறிப்பிட்டுள்ள மொத்த பரப்பளவு ஏக்கர்–37 செண்ட்–63 சர்வே எண் வாரியாக 808ன் மொத்த பரப்பளவு ஏக்கர்–17 செண்ட்–89, சர்வே எண் 808ன் மொத்த பரப்பளவு ஏக்கர்–19 செண்ட்–74.

(2) மனைப்பிரிவு வரைபடம் அனுமதி விண்ணப்பத்திற்கு முன்புள்ள நில உடமை பதிவுத் திட்ட பதிவேடுகளின்படி (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/1 உரிமையாளர் சீனியம்மாள் பட்டா எண் 2764 நிலத்தின் பரப்பளவு செண்ட்–2.47.

(3) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/2A உரிமையாளர் பட்டுலிங்கம் / மாடசாமி / பாஸ்கர் வின்செண்ட் பட்டா எண்–2439 நிலத்தின் பரப்பளவு செண்ட்–3.70

(4) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/2B உரிமையாளர் தர்மராஜ் பட்டா எண்–1062 நிலத்தின் பரப்பளவு செண்ட்–63

(5) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/3A உரிமையாளர் தர்மராஜ் – சீனியம்மாள் பட்டா எண்–3151 நிலத்தின் பரப்பளவு செண்ட்–17.30

(6) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/3B உரிமையாளர் பட்டுலிங்கம் / மாடசாமி / பாஸ்கர் வின்செண்ட் பட்டா எண்–2439 நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–4 செண்ட்–82

(7) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/4 உரிமையாளர் தர்மராஜ் / மனோரஞ்சிதம்மாள் பட்டா எண்–3262 நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–2.6

(8) (UDR) குறிப்பிட்டுள்ள 808 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/5 உரிமையாளர் சின்னமணி / செண்பகம் பட்டா எண்–2440 நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–7 செண்ட்–15. மேலும் சர்வே எண் 808ல் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/5ல் அரசு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண் 92/86 ஏக்கர் 7.15 செண்ட்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(9) மேலும் சர்வே எண் 808ல் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 808/2A – 808/2B – 808/3Aல் அரசு அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண் 907/89 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(10) ஆக மொத்தம் சர்வே எண் 808ல் UDRல் குறிப்பிட்டுள்ளபடி நில உரிமையாளர்கள் அவர்களுக்கு உரிய பகுதியில் மனைப்பிரிவு எண் 92/86 ஏக்கர் 7.15 மற்றும் மனைப்பிரிவு எண் 907/89 ஏக்கர் 2.80 போக மனைப்பிரிவுக்கு வரைபடம் அனுமதி கோரிய விண்ணப்பதாரர் நிலத்தின் மொத்த பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–85.

(11) நில உடமை பதிவுத் திட்ட பதிவேடுகளின்படி (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/1A – பட்டா எண்–721 உரிமையாளர் சீனியம்மாள் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–5.

(12) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/1B பட்டா எண்–1062 உரிமையாளர் தர்மராஜ் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–5

(13) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/2B1 பட்டா எண்–1602 உரிமையாளர் மனோரஞ்சிதம்மாள் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–4 செண்ட்–6

(14) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/2B2 பட்டா எண்–2439 நிலத்தின் பட்டுலிங்கம் / மாடசாமி / பாஸ்கர் வின்செண்ட் பரப்பளவு செண்ட்–18.5

(15) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/2C பட்டா எண்–2832 உரிமையாளர் சீனியம்மாள் மற்றும் நான்கு பேர்கள் நிலத்தின் பரப்பளவு செண்ட்–24.7 (பொது நான்ங்கில் ஒரு பங்கு செண்ட்–6)

(16) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/2D1 பட்டா எண்–2439 உரிமையாளர் பட்டுலிங்கம் / மாடசாமி / பாஸ்கர் வின்செண்ட் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–1 செண்ட்–58

(17) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/2D2 பட்டா எண்–1062 உரிமையாளர் தர்மராஜ் நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–2 செண்ட்–91

(18) (UDR) குறிப்பிட்டுள்ள 809 சர்வே எண்ணில் இருந்து உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/3A பட்டா எண்–2764 உரிமையாளர் சீனியம்மாள் மற்றும் மூன்று பேர்கள் நிலத்தின் பரப்பளவு செண்ட்–5

(19) ஆக மொத்தம் சர்வே எண் 809ல் UDRல் மனைப்பிரிவு வரைபடம் அனுமதி கோரிய விண்ணபதாரர் நிலத்தின் மொத்த பரப்பளவு ஏக்கர்–17 செண்ட்–13 மேலும் சர்வே எண்கள் 809ல் உட்பிரிவு செய்யப்பட்ட சர்வே எண்கள் 809/1AP – 809/1B – 809/2B பாகத்தில் ஏற்கனவே விண்ணபதாரர் நிலத்தில் விண்ணப்பம் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு மனைப்பிரிவுக்கு ம.பி.வ./ம(தி.க) எண் 21/85 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு பரப்பளவு ஏக்கர்–5 போக மீதமுள்ள நிலத்தின் பரப்பளவு ஏக்கர்–12 செண்ட்–13

(20) நில உடமை பதிவுத் திட்ட பதிவேடுகளின்படி (UDR) குறிப்பிட்டுள்ளபடி பரப்பளவு 808 (ம) 809 சர்வே எண்களில் மனைப்பிரிவு அனுமதிக்கு விண்ணபித்துள்ளவர்களின் நிலத்தின் மொத்த பரப்பளவு சர்வே எண் 808–ல் ஏக்கர்–5 செண்ட் 85 சர்வே எண் 809–ல் எக்கர்–12 செண்ட் 13 இரண்டும் சேர்த்து ஏக்கர்–17 செண்ட்–98 ஆகும்

(21) நில உடமை பதிவுத் திட்ட பதிவேடுகளின்படி (UDR) குறிப்பிட்டுள்ளபடி பரப்பளவு 808 (ம) 809 ஆகிய சர்வே எண்களில் மனைப்பிரிவு வரைபடம் அனுமதி கோரிய விண்ணபதாரர் நிலத்தின் மொத்த பரப்பளவு ஏக்கர்–17 செண்ட்–98ல் 22 ஏக்கர் நிலங்களுக்கு மனைப்பிரிவு வரைபடம் அனுமதி வழங்கப்பட்டதால் 22 ஏக்கர் நிலங்களும் அவர்களுக்கு சொந்தமானது என்று உள்ளாட்சி அமைப்புகள் கருதி மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கிருக்கமாட்டார்கள் என்று நான் எண்ணுகிறேன்.

(22) மேலும் 808 (ம) 809 ஆகிய சர்வே எண்களில் 22 ஏக்கர் நிலங்களும் விண்ணபதாரர் அவர்களுக்கு உரிய நிலம் என்ற பதிவுத்துறை ஆவணம் இல்லாமல் பொதுதிறவிடப் பகுதிக்கு தானமாக நிலங்களை பதிவு செய்திருக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு அல்ல என்ற விவரங்கள் மூன்று ஆவணக்குறிப்புகள் மூலமாக தெரியபடுத்துகிறேன் இரண்டாம் ஆவணக்குறிப்பு பதிவுத் துறை ஆவணங்களில் உள்ள விவரங்கள்படி,

(23) மனைப்பிரிவு விண்ணபதாரரின் நிலஉரிமை ஆவணம் எண் 2217 வருடம்–1972ன்படி விண்ணபதாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண் 808ல் பரப்பளவு செண்ட்–1.5 சர்வே எண் 809ல் பரப்பளவு ஏக்கர்–6 செண்ட்–71.5

(24) மனைப்பிரிவு விண்ணபதாரரின் நிலஉரிமை ஆவணம் எண் 2218 வருடம்–1972ன்படி விண்ணபதாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண் 808ல் பரப்பளவு செண்ட்–68.5 சர்வே எண் 809ல் பரப்பளவு ஏக்கர்–4 செண்ட்–65

(25) மனைப்பிரிவு விண்ணபதாரரின் நிலஉரிமை ஆவணம் எண் 2219 வருடம்–1972ன்படி விண்ணபதாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண் 809ல் பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–8

(26) மனைப்பிரிவு விண்ணப்பதாரரின் நிலஉரிமை ஆவணம் எண் 2200 வருடம்–1972ன்படி விண்ணப்பதாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிலம் சர்வே எண் 808ல் பரப்பளவு செண்ட்–1.5 சர்வே எண் 809ல் பரப்பளவு ஏக்கர்–5 செண்ட்–27.5

(27) மனைப்பிரிவு விண்ணப்பதாரர்களுக்கு பாத்தியப்பட்ட மொத்த பரப்பளவு ஏக்கர்–17 செண்ட்–48.5 ஆகும். இந்த பரப்பளவில் 1985 ஆம் ஆண்டு ம.பி.வ–21/85 என எண்ணிட்டு ஏக்கர்–5க்கு மனைப்பிரிவு ஒப்புதல் பெற்றுள்ளார்கள்.

(28) மனைப்பிரிவு விண்ணப்பதாரர்களுக்கு பாத்தியப்பட்ட மொத்த பரப்பளவு ஏக்கர்–17 செண்ட்–48.5 அனுமதி பெறப்பட்ட ஏக்கர்–5 போக மீதமுள்ள ஏக்கர்–12 செண்ட்–48.5ல் சட்டத்திற்கு புறம்பாக ஏக்கர்–22 செண்ட் 22க்கு மனைப்பிரிவு வரைபடம் அனுமதி பெற்றுள்ளார்கள்.

(29) மேற்கண்ட ஆவண எண் 2217 & 2218 & 2219 & 2220ல் உள்ள பகுதிகளை மீண்டும் பதிவாளர் அலுவலகத்தில் இரண்டு ஆவணங்களாக பதிவு செய்துள்ளார்கள். அதன் ஆவண எண் 620/1976 ஆம் ஆண்டு மற்றும் ஆவண எண் 621/1976 ஆம் ஆண்டு,

(30) மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரியும் என்ற நம்பிக்கையில் மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கியிருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு அல்ல என்ற விவரங்களை மூன்று ஆவணக் குறிப்புகள் மூலமாக தெரியபடுத்துகிறேன். மூன்றாவது ஆவணக்குறிப்பு கோப்பு எண் 2682/86–ல் உள்ள கடிதம் தொடர்பான ஆவணங்களில் உள்ள விவரங்கள்படி,</u>

(31) மனைப்பிரிவு வரைபடம் அனுமதி கோரியது தொடர்புடைய திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை அலுவலக கடிதம் ந.க. எண் 5060/85 நாள் 14.02.86–ல் மனைப்பிரிவு நிபந்தனை எண் 16ல் குறிப்பிட்டுள்ளபடி மேற்படி இத்துறையினால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டும் தான் வழங்கப்பட்டுள்ளது. பிரஸ்தாப இடம் உரிமை சம்பந்தமாக வில்லங்கம் ஏதேனும் இருப்பின் உள்ளாட்சியினரால் பரிசீலித்து முடிவு எடுக்கப்படவேண்டும். மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மட்டும் வழங்கப்பட வேண்டும் என்று கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(32) மனைப்பிரிவு வரைபடம் அனுமதி கோரியது தொடர்புடைய திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை அலுவலக கடிதம் ந.க. எண் 5060/85ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு நிபந்தனைகள் எண் 18ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு இடம் நில ஆர்ஜித சட்டம் பிரிவு 4(1)ன்படி பிரகடணம் செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி பரிசீலனை செய்த பின்னரும் நில உச்சவரம்பு சட்டம் 1978 சம்பந்தமாக விதிமுறைகளை நிறைவு செய்வதாக நிர்வாக அதிகாரி திருப்தி அடைந்த பின்னர் தான் மனைப்பிரிவுக்கு உள்ளாட்சியினர் ஒப்புதல் அளித்து அங்கீகாரம் வழங்கும்படி தெரிவித்துள்ளார்.

(33) நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி அலுவலக கடிதம் ந.க. எண் 5060/85/தி.க.ம3/ நாள் 14.02.1986ன் கடிதம் தொடர்புடைய மனைப்பிரிவு நிபந்தனைகள் எண் 19ல் குறிப்பிட்டுள்ளபடி பொது ஒதுக்கீட்டிற்கான இடங்களை மனுதாரரால் உள்ளாட்சி நிர்வாக அதிகாரிகள் பெயரில் பதிவாளர் அலுவலகத்தின் மூலம் பதிவு செய்து உள்ளாட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(34) மேலும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் திருநெல்வேலி அலுவலக கடிதம் ந.க. எண் 5060/85/தி.க.ம3 நாள் 14.02.1986ன் கடிதம் தொடர்புடைய மனைப்பிரிவு நிபந்தனைகள் எண் 20ல் குறிப்பிட்டுள்ளபடி மனைப்பிரிவு ஒப்பந்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்து பதிவு செய்யப்பட்ட எண் மற்றும் நாள் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படும் ஆணையில் குறிப்பிட்டு உள்ளூர் திட்ட குழுமத்தால் மனைப்பிரிவுக்கு ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(35) மேற்கண்ட விவரங்கள் அனைத்திற்கும் நான் இரண்டு கடிதத்தில் தகவல் பெறும் உரிமை சட்டம் மனுவில் தகவல் கோரியுள்ளேன். இதுநாள் வரையில் தகவல் கிடைக்கப்பெறவில்லை. மனு தொடர்பாக எனக்கு வழங்கப்பட்ட பதில் கடிதம் இத்துடன் இணைத்து உள்ளேன்.

(36) மேலும் சர்வே எண் 808 & 809 ல் உள்ள பகுதிகளில் 12–ஏக்கர் பரப்பளவில் குடியிருந்த ஆதிதிராவிடர் மக்களுக்கு பட்டா வழங்க 1985–ம் மார்ச் மாதத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகத்தின் மூலமாக சென்னை தலைமை செயலகத்திற்கு சென்றுள்ளதாக நான் 03.01.1986ம் தேதியில் திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு காங்கிரஸ் கமிட்டி தலைவர் (பிற்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர்) அவர்கள் கடிதம் வழங்கியுள்ளார்.

(37) மேற்கண்ட கடிதம் தொடர்பாக மீண்டும் ஒரு கடிதத்தில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசாணை வந்துவிடும் என்ற விவரம் தெரியபடுத்தியுள்ளார்.

(38) திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநரின் கடிதம் ந.க. எண் 5060/85 தி.க.ம–3 நாள் 10.01.86–ல் ஒரு வாரம் (7 நாட்கள்) கால அவகாசம் கொடுத்து அரசாணை பெற்று வழங்குமாறு ஒரு கடிதம் வழங்கியுள்ளார். அந்த கடிதமும் அவரிடம் வழங்காமல் திரும்ப வந்துவிட்டதாக கோப்பு எண் 2682/86–ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

(39) மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் திருநெல்வேலி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் 5060/85/திகம–3 நாள் 14.02.86–ல் மனைப்பிரிவு வரைபடம் அனுமதி மட்டுமே வழங்கப்படுகிறது. மேற்படி நிலஉரிமை ஆவணம் மற்றும் நில ஆர்ஜிதம் மற்றும் நில உச்சவரம்பு சட்ட நடைமுறைகள் தீர ஆராய்ந்து பரிசீலித்து முடிவு எடுக்கப்பட வேண்டும். மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

(40) மேற்படி மனைப்பிரிவு அங்கீகாரம் தொடர்பாக தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் விவரங்கள் கோரிய கடிதம் ந.க. எண் 5060/85 தி.க.ம–3 நாள் 11.03.86–ல் கேட்டுள்ளார்.

(41) மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தெரியும் என்று நம்பிக்கையில் மேற்படி மனைப்பிரிவுக்கு இறுதி அங்கீகாரம் வழங்கியிருக்கமாட்டார்கள் என்று எண்ணுகிறேன்.

(42) மேலும் தூத்துக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தூத்துக்குடி தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு தொடர்பான பதிவேடுகளை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 2(j)ன்கீழ் களஆய்வு செய்து மனைப்பரிவு பதிவேடுகளின்அனைத்து பக்கங்களும் சான்றிட்ட நகல்களாக பெறப்பட்டது. அதன் பதிவேடுகளில் மாநகராட்சி அலுவலர்கள் அவர்கள் கடிதத்தில் தெரிவித்த அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு 8/86 குறிப்புகள் இல்லை.

(43) மேலும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவிகளில் உள்ளாட்சி அமைப்புகள் பொது திறவிடப்பகுதிகளாக அறிவிக்கும்பொழுது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் / நடைமுறைகள் அடங்கிய அரசாணை / குறிப்பாணை / நீதிமன்ற ஆணை / சுற்றறிக்கைகள் இருப்பின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)ன்கீழ் வழங்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மனு அளிக்கப்பட்டுள்ளது. என்னுடைய மனுவை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 6(3)–ன்கீழ் மாநகராட்சி அலுவலகத்திற்கு மாறுதல் செய்துள்ளார்கள். தகவல் வர வேண்டும்.

<u>நேரடியாக அளிக்கப்பட்ட வாக்குமூலம்:–</u>

"(1) தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் அரசால் அங்கீகரிக்கப்படாத மீளவிட்டான் பகுதி 2–க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262–ல் உள்ள இடத்தினை தூத்துக்குடி மாநகராட்சி ஆவதற்கு முன்பு 19.10.2022 நாளிட்ட ஆவண எண்.5146/2022 மூலம் கிரையம் பெற்றேன். இந்த மனை பிரிவு வரைப்படம் எண்.8/86க்கு இறுதி அங்கீகாரம் இதுவரை வழங்கப்படவில்லை. இருப்பினும் மேற்கண்ட சர்வே எண் உள்ள எனது வீட்டிற்கு சொத்துவரி விதிக்குமாறு இரண்டுமுறை விண்ணபப்பங்கள் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அளித்தேன்.

(2) மேற்கண்ட மனுவிற்கு உதவி ஆணையர் (பொ) தெற்கு மண்டலம் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கடிதத்தில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808ல் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு எண் 8/86–ல் தெரிவித்துள்ள பிளாட் எண் 8 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதால் அதன்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்று தெரிவித்துள்ளார். ஆனால் மேற்கண்ட மீளவட்டான் பகுதி 2க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262 இடம் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவாகும். எனவே இந்த அங்கீகரிக்கப்படாத மனை பிரிவில் OSR (பொது ஒதுக்கீடு) என்ற வகைப்பாடு ஏதும் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலம், உதவி ஆணையாளருக்கு மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் வழங்கக் கோரி மனு அளித்தும் இதுவரை தகவல் ஏதும் பெறப்படவில்லை.

(4) தற்போது மேற்கண்ட எனது புகார் தொடர்பாக 236 பக்கங்கள் கொண்ட ஆவண நகல்களை இம்முறை மன்ற நடுவர் முன் சமர்ப்பிக்கின்றேன். அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு விவரங்கள் என்று என்னால் எழுத்து பூர்வமாக தற்போது அளிக்கப்படும் 236 பக்கங்கள் கொண்ட ஆவணங்களில் பக்கம் 38 முதல் 45 வரையில் உள்ள ஆவணமாகும். இந்த ஆவணங்களின் அடிப்படையில் தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலம், மீளவிட்டான் பகுதிக்கு உட்பபட்ட சர்வே எண்.808/4A/1 A பட்டா எண் 3262ற்கு, சொத்து வரி விதிக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணியுடன் கேட்டுக்கொள்கிறேன்."

5. எதிர்மனுதாரர் தரப்பில் 25.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு யாரும் ஆஜராகவில்லை என்பதால், எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.12.2025 அன்று மீண்டும் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.12.2025 தேதியிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

6. இந்நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் தன்னுடைய 09.12.2025 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

"1) மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது.

2) மீளவிட்டான் சர்வே எண் 808ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண் 8/86ன் வரைபட நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

3) சொத்து நிர்ணயம் செய்ய கோரிய மனு நிராகரிக்கப்பட்டதற்கான உரிய காரணம் தெற்கு மண்டல உதவி ஆணையர் அவர்கள் கடிதம் எண் அ1/1115/2025 நாள் 24.04.2025ன்படி மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதனை மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

4) மனுதாரர் மேற்படி பொருள் தொடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களுக்கு தெற்கு மண்டல அலுவலக கடிதம் எண் அ1/1330/2025, அ1/1331/2025, அ1/1332/2025 மற்றும் அ1/1333/2025, நாள் 04.08.2025ன்படி கேள்விகளுக்கு தகவல் வழங்க இயலாது எனவும் தகவல்கள் மட்டும் கோரியதற்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது.

5) மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரி இணைக்கப்பட்ட பத்திரத்தின் தபசில் பகுதி பக்கம் எண்.5ல் மீளவீட்டான் சர்வே எண்.808ல் அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ன்படி செல்சீனி காலனி என்று பெயரிட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் கையிருப்பு மனை என குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கையிருப்பு நிலம் இருப்பதில்லை.

6) ஆணையாளர், நகர் மற்றும் கிராம திட்டமிடல் துறை அவர்களின் கடிதம் எண் நே.மு.ந.க.எண்.16385/07 – எல்ஏ 2ன்படி, சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.A 156 of 2000 and 45/2003 ஆகியவற்றில் பூங்கா, விளையாடும் இடம், திறவிடம் மற்றும் சிறுவர் விளையாடும் இடம் போன்ற பொது உபயோகங்களுக்கான ஒதுக்கீடுகளை வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட வேண்டாம் என நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புகளை சுட்டிக்காட்டி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள கடிதம் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

7) சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண் W.P. (MD) No.19430 of 2020 and W.M.P. (MD) No.16207 of 2020 மற்றும் W.M.P. (MD) No.7770 of 2021 and W.M.P. (MD) No.5917 & 5918 of 2021. ஆகியவற்றில் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வின் உத்திரவுகளின்படி, திறவிடம் மற்றும் பூங்கா ஆகியவற்றை வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்தக் கூடாது என உத்திரவிடப்பட்டுள்ளது.

8) மேற்படி நீதிமன்ற உத்தரவுகள் மற்றும் நகர் & கிராம திட்டமிடல் துறை அவர்களின் கடிதம் ஆகியவற்றினை குறிப்பிட்டு தூத்துக்குடி மாநகராட்சி தெற்கு மண்டல உதவி பொறியாளர் (திட்டம்) அவர்களின் ஆட்சேபனைபடி சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடம் மீளவிட்டான் சர்வே எண் 808ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது திறவிடம் என குறிப்பிடப்பட்டு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்பதால் தெற்கு மண்டல உதவி ஆணையர் அவர்கள் கடிதம் எண் அ1/1115/2025 நாள் 24.04.2025 என மாநகராட்சியினால் வழங்கப்பட்டுள்ள உத்திரவினை உறுதி செய்து மனுதாரர் திரு. விஜயன் என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள

முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையர் 17.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

''மனுதாரரின் மனுவினை பரிசீலனை செய்யப்பட்டது. அதன்படி:–

1) மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது.

2) மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரி இணைக்கப்பட்ட பத்திரத்தின் தபசில் பகுதி பக்கம் எண்.5ல் மீளவீட்டான் சர்வே எண்.808ல் அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ன்படி செல்சீனி காலனி என்று பெயரிட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் கையிருப்பு மனை என குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கையிருப்பு நிலம் இருப்பதில்லை.

3) ஆணையாளர், நகர் மற்றும் கிராம திட்டமிடல் துறை அவர்களின் கடிதம் எண்.நே.மு.ந.க.எண்.16385/07 – எல்ஏ 2ன்படி, சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.W.A 156 of 2000 and 45/2003 (மற்றும்) W.P (MD) No.19430 / 2020 and W.M.P (MD) No.16207 / 2020 மற்றும் W.P (MD) No.7770/2021 and W.M.P.(MD) No.5917 & 5918/2021. ஆகிய வழக்குகளில் பூங்கா, விளையாடும் இடம், திறவிடம் மற்றும் சிறுவர் விளையாடும் இடம் போன்ற பொது உபயோகங்களுக்கான ஒதுக்கீடுகளை வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டாம் என ஆணையிடப்பட்டுள்ளது.

மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் மீளவிட்டான் சர்வே எண்.808ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது திறவிடம் என குறிப்பிட்டுள்ளதால் சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை எனவும் மேலும் மனுதாரருக்கு வழங்கியுள்ள பட்டாவினை ரத்து செய்ய தூத்துக்குடி மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.''

8. மனுதாரரின் மனு, மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் எழுத்துபூர்வ வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட தெற்கு மண்டல அலுவலகத்தில் அரசால் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு, மீளவிட்டான் பகுதி 2–க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262–ல் உள்ள இடத்தினை தூத்துக்குடி மாநகராட்சி ஆவதற்கு முன்பு 19.10.2022 நாளிட்ட ஆவண எண்.5146/2022 மூலம் மனுதாரரால் கிரையம் பெறப்பட்ட, இந்த மனை பிரிவு வரைப்படம் எண்.8/86க்கு இறுதி அங்கீகாரம் இதுவரை வழங்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட சர்வே எண் உள்ள தனது வீட்டிற்கு சொத்துவரி விதிக்குமாறு இரண்டுமுறை விண்ணப்பங்கள் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு அளிக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட மனுவிற்கு உதவி ஆணையர் (பொ) தெற்கு மண்டலம் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலக கடிதத்தில் மீளவிட்டான் கிராமம் சர்வே எண் 808ல் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு எண் 8/86–ல்

தெரிவித்துள்ள பிளாட் எண் 8 மனைப்பிரிவு பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதால் அதன்படி மாநகராட்சிக்கு சொந்தமான இடத்திற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், ஆனால் மேற்கண்ட மீளவட்டான் பகுதி 2க்கு உட்பட்ட சர்வே எண் 808/4A/1 A பட்டா எண் 3262 இடம் அங்கீகரிக்கப்படாத மனை பிரிவானதால், இந்த அங்கீகரிக்கப்படாத மனை பிரிவில் OSR (பொது ஒதுக்கீடு) என்ற வகைப்பாடு ஏதும் இல்லை என்று மனுதாரரால் தெரிவிக்கப்பட்டது என்பதும், தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலம், உதவி ஆணையாளருக்கு மேற்கண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் தகவல் வழங்கக் கோரி மனு அளித்தும் இதுவரை தகவல் ஏதும் பெறப்படவில்லை என்பதும், தூத்துக்குடி மாநகராட்சி, தெற்கு மண்டலம், மீளவிட்டான் பகுதிக்கு உட்பட்ட சர்வே எண்.808/4A/1 A பட்டா எண் 3262ற்கு, சொத்து வரி விதிக்க தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது ஒதுக்கீடு திறவிடத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என்பதும், மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரி இணைக்கப்பட்ட பத்திரத்தின் தபசில் பகுதி பக்கம் எண்.5ல் மீளவீட்டான் சர்வே எண்.808ல் அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ன்படி செல்சீனி காலனி என்று பெயரிட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் கையிருப்பு மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் கையிருப்பு நிலம் இருப்பதில்லை என்பதும், நகர் மற்றும் கிராம திட்டமிடல் துறை ஆணையாளரின் நே.மு.ந.க.எண் 16385/07-எல்ஏ2ன்படி, சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.A 156 of 2000 and 45/2003 (மற்றும்) W.P (MD) No.19430 / 2020 and W.M.P (MD) No.16207 / 2020 மற்றும் W.P (MD) No.7770/2021 and W.M.P.(MD) No.5917 & 5918/2021. ஆகிய வழக்குகளில் பூங்கா, விளையாடும் இடம், திறவிடம் மற்றும் சிறுவர் விளையாடும் இடம் போன்ற பொது உபயோகங்களுக்கான ஒதுக்கீடுகளை வேறு உபயோகங்களுக்கு பயன்படுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டாம் என ஆணையிடப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் மீளவிட்டான் சர்வே எண்.808ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது திறவிடம் என குறிப்பிட்டுள்ளதால் சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை இல்லை எனவும் மேலும் மனுதாரருக்கு வழங்கியுள்ள பட்டாவினை ரத்து செய்ய தூத்துக்குடி மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி ஆணையரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மேற்கண்ட தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட மீளவிட்டான் பகுதி–2க்கு உட்பட்ட சர்வே எண்.808ல் சொத்துவரி நிர்ணயம் செய்யக் கோரிய மனைப்பிரிவு குறித்து மனுதாரர் தனது எழுத்துபூர்வமாக அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில், அம்மனைப்பிரிவினை அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு என்றும், அம்மனைப்பிரிவு இன்று வரை இறுதி செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். ஆனால் தூத்துக்குடி மாநகராட்சி உதவி ஆணையரின் வாக்குமூலத்தில், மாநகராட்சியிடம் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரி இணைக்கப்பட்ட பத்திரத்தின் தபசில் பகுதி பக்கம் எண்.5ல் மீளவிட்டான் சர்வே எண் 808–ல் அங்கீரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ன்படி செல்சீனி காலனி என்று பெயரிட்டு பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டதில் கையிருப்பு மனை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் சொத்துவரி நிர்ணயம் செய்ய கோரிய இடம் மீளவிட்டான் சர்வே எண்.808ல் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.8/86ல் பொது திறவிடம் என குறிப்பிட்டுள்ளதால் சொத்துவரி நிர்ணயம் செய்ய வழிவகை

இல்லை எனவும் மேலும் மனுதாரருக்கு வழங்கியுள்ள பட்டாவினை ரத்து செய்ய தூத்துக்குடி மாநகராட்சியால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ள நிலையில், இம்மனைப்பிரிவில் மனுதாரர் வாங்கியது அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவா அல்லது அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவா என்பதையும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவாக இருந்தால், எந்த உள்ளாட்சி அமைப்பு அங்கீகரித்துள்ளது என்பதையும், மற்றும் மனுதாரரின் இடமானது திறவிடத்தில் உள்ளதா என்பதையும் வருவாய்த் துறையுடன் இணைந்து உரிய ஆவணங்கள் கொண்டு ஆராய்ந்து, அதன் அடிப்படையில் மனுதாரர் கோரிக்கை தொடர்பாக தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தூத்துக்குடி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. த. விஜயன்,
கதவு எண் 58/102, 3வது தெரு கிழக்கு,
செல்சினி காலனி,
தூத்துக்குடி–628 008.

(2) ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

(4) இணை இயக்குநர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

நகல் :
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032